

குலோத்துங்க சோழன் உலா

குலோத்துங்க சோழன் உலா

பதிப்பாசிரியக் குழுவினரால்
பல பிரதிகளை ஒப்பு நோக்கிப் பரிசோதித்து
வெளியிடப்பெற்றது

வெளியிடுவோர்
எஸ். ராஜம்
5, தம்புச் செட்டித் தெரு
சென்னை-1

நூன்முகம்

உலாப் பிரபந்தம் தலைவன் ஒருவன் பவனி வரும் சிறப்பை நிலைக் களமாகக் கொண்டது. தலைவன் வீதியில் பவனி வர, அவனைக் கண்டு, பேதை முதல் பேரிளம்பெண் ஈறான ஏழு பருவ மகளிரும் காதல் கொண்டதாகப் பாடப் பெறுவது. தெய்வங்களையும் மக்களையும் தலைவர் களாகக் கொண்டு முன்னோர் உலாப் பாடியுள்ளனர். இதனை 'உலாப்புறம்' எனவும் வழங்குவர். இது கலிவெண்பாவால் பாடப் பெறும். இப் பாடலில் வரும் ஓர் எதுகை அமைந்த இரண்டு இரண்டு அடிகளைக் கண்ணி என்பர்.

இந் நூலுக்குரிய தலைவனாகிய குலோத்துங்கன் முதற்குலோத்துங் கனின் வழித்தோன்றலாகிய விக்கிரம சோழன் புதல்வன் ஆவன். விக்கிரம சோழன், குலோத்துங்கன், அவன் மகன் இராசராசன் ஆகிய மூவரது அவைக்களத்தும் சிறப்புற்று விளங்கிய கவிச்சக்கரவர்த்தி ஒட்டக்கூத்தரால் பாடப்பெற்றது இந் நூல். இவர் ஏனை இருவர் மீதும் உலாப் பாடியுள்ளார். ஒட்டக்கூத்தரால் இயற்றப் பெற்ற மேற்குறித்த மூன்று அரசரைப் பற்றிய உலாக்களையும் ஒருசேர 'மூவர் உலா' என்று இக் காலத்து வழங்குகின்றனர்.

சேரமான்பெருமாள் நாயனார் பாடிய 'ஆதி உலா'விற்கு அடுத்தபடி வைத்து எண்ணப்பெறுவன இந்த மூவர் உலாக்கள். இவற்றுள் குலோத் துங்க சோழன் உலா 387 கண்ணிகள் கொண்டது; ஈற்றில் தனி வெண்பா ஒன்றும் உள்ளது. உலா செல் நெறியை விளக்கும் வகையில் அங்கங்கே தலைப்புக்கள் புதியனவாகச் சேர்க்கப் பெற்றுள்ளன.

குலோத்துங்கனின் முன்னோர் பெருமை

தேர் மேவு பாய் புரவிப் பாசடைச் செங் கமலம்,
போர் மேவு பாற்கடல், பூத்தனையோன்; பார்மேல் 1

மருள, பசு ஒன்றின் மம்மர் நோய் தீர,
உருளும் திருத் தேர் உரவோன்; அருளினுல், 2

பேராப் பெரும் பகை தீர, பிற வேந்தர்
ஊராக் குலிச விடை ஊர்ந்தோன்; சோரா, 3

துயில் காத்து, அரமகளிர் சோர் குழை காத்து, உம்பர்
எயில் காத்த நேமி இறையோன்; வெயில் காட்டும், 4

அவ் வானவர்கோன், ஒரு மணி ஆசனத்தில்
ஒவ்வாமல் ஏத்த உடன் இருந்தோன்; கவ்வை 5

எழ, குரைக்கும் பேழ் வாய் இருங் கூற்றுக்கு ஏற்ப
வழக்கு உரைக்கும் செங்கோல் வளவன்; பழக்கத்தால் 6

போந்த புலியுடனே புல்வாய் ஒரு துறை நீர்
மாந்த உலகு ஆண்ட மன்னர் பிரான்; காந்து எரியில் 7

வெந்தார் உயிர் பெற்று உடல் பெற்று விண் ஆள,
மந்தாகினி கொணர்ந்த மன்னர்கோன்; முந்திப் 8

பொரு தேர்கள் ஈர்-ஐந்தின் ஈர்-ஐவர் போர், பண்டு,
ஒரு தேரால் வென்ற உரவோன்; கருதி 9

மலை பத்தும் வெட்டும் உருமின் மறவோன்
தலை பத்தும் வெட்டும் சரத்தோன்; நிலை தப்பா 10

மீளி தலை கொண்ட தண்டத்தான், மீளிக்குக்
கூளி தலை பண்டு கொண்ட கோன்; நாளும், 11

பதுமக்கடவுள் படைப்பு அடையக் காத்த
முதுமக்கட் சாடி முதலோன்; பொது மட்க, 12

வாங்கு எயில் நேமி வரை ஆக, மண் ஆண்டு,
தூங்கு எயில் கொண்ட சுடர் வாளோன்; ஓங்கிய 13

மால் கடற் பள்ளி வறிது ஆக, மண் காத்து,
மேல் கடல் கீழ் கடற்கு விட்ட கோன்; கோல் கொன்று 14

அலை எறியும் காவேரி ஆற்றுப்படைக்கு
மலை எறியும் மன்னர்க்கு மன்னன்; நிலை அறியாத் 15

தொல் ஆர்கலி வலையம் தோள் வலையம் முன் திருந்த
வில்லால் நடு உள்ள வெற்பு எடுத்தோன்; ஒல்லைக் 16

கொலை ஏறு உடம்பு அடையக் கொய்தாலும், எய்தாத்
துலை ஏறி வீற்றிருந்த தோன்றல்; தலை ஏறு 17

மண் கொண்ட பொன்னிக் கரை கட்ட வாராதாள்
கண் கொண்ட சென்னிக் கரிகாலன்; எண் கொள் 18

பணம் புணர்ந்த மோலியான் கோமகளைப் பண்டு
மணம் புணர்ந்த கிள்ளி வளவன்; அணங்கு 19

படுத்துப் பொறையனைப் பொய்கைக்குப் பண்டு
கொடுத்துக் களவழிப் பாக் கொண்டோன்; அடுத்து அடுத்துச் 20

சீறும் செருவில், திரு மார்பில் தொண்ணூறும்
ஆறும் படு தழும்பின் ஆகத்தோன்; ஏறப் 21

பிரமவரக்கன் அகலம் பிளந்து,
பரமர் திருத் தில்லை பார்த்தோன்; நரபதியர் 22

தாழ, முன் சென்று, மதுரைத் தமிழ்ப் பதியும்
ஈழமும் கொண்ட இகலாளி; சூழவும் 23

ஏறிப் பகல் ஒன்றில், எச் சுரமும் போய், உதகை
நூறி, தன் தூதனை நோக்கினேன்; வேருகக் 24

கங்கா நதியும் கடாரமும் கைவரச்
சிங்காதனத்து இருந்த செம்பியர்கோன்; எம் கோன் 25

புவி ராச ராசர் மனு முதலோர் நாளில்
தவிராத சுங்கம் தவிர்த்தோன்; கவி ராசர் 26

போற்றும் பெரியோன்; இவன் பின்பு பூதலங்கள்
ஆற்றும் திருத் தோள் அகளங்கன்; வேற்றூர் 27

விரும்பு அரணில் வெங் களத் தீ வேட்டு, கலிங்கப்
பெரும் பரணி கொண்ட பெருமான் தரும் புதல்வன், 28

குலோத்துங்கசோழன் சிறப்புக்கள்

கொற்றக் குலோத்துங்க சோழன்; குவலயங்கள்
முற்றப் புரக்கும் முகில் வண்ணன்; பொன்-துவரை 29

இந்து மரபில் இருக்கும் திருக் குலத்தில்
வந்து, மனு குலத்தை வாழ்வித்த பைந் தளிர்க் கை 30

மாதர்ப் பிடி பெற்ற வாரணம்; அவ் வாரணத்தின்
காதல் பெயரன் கன களபன்; யாதினும் 31

தீட்டற்கு அரிய திருவே திரு மாலை
சூட்ட, திரு மகுடம் சூடிய பின்—

குலோத்துங்கன் முடி சூடியபின் செய்தவை

நாட்டு 32

முறை விட்ட வேற்று முடி மன்னர் தம்தம்
சிறை விட்டு, அரசு அருளிச்செய்து, கறை விட்டு, 33

மைஞ்ஞாகம் எட்டும் மத நாகம் ஓர் எட்டும்
பைஞ்ஞாகம் எட்டும் பரம் நீர, இஞ் ஞாலம் 34

தாதைக்குப் பின்பு தபனற்கும் தோலாத
போதத் திமிரப் பொறை நீக்கி—

கோப்பெருந்தேவியுடன் இருந்து நிதியங்கள் வழங்கியமை

மாதரில் 35

ஒக்க அபிடேகம் சூடும் உரிமைக்கண்
தக்க தலைமைத் தனித் தேவி, மிக்க 36

புவனி முழுதுடைய பொற்றெடியும் தானும்
அவனிசுரர் சுருதி ஆர்ப்ப, நவ நிதி தூய், 37

திருச்சிற்றம்பலத்தில் செய்த திருப்பணிகள்

ஏத்துத் தரும் கடவுள் எல்லீ இல் ஆனந்தக்
கூத்துக் களி கூரக் கும்பிட்டு, போத்தின்மேல் 38

தில்லைத் திரு மன்ற முன்றில் சிறு தெய்வத்
தொல்லைக் குறும்பு தொலைத்து எடுத்து; மல்லல் 39

தசும்பு வளர் கனித் தண் பெரு நாவல்
அசும்பு பசும் பொன் அடுக்கி; பசும் பொன் 40

அலகை இகந்த அசல குல வச்சிரப்
பலகை ததும்பப் பதித்து; மலர் கவிகைக் 41

காக்கும் கடல் ஏழின் முத்தும், வர கங்கை
தூக்கும் அருவியின், சூழ் போக்கி; நோக்கம் 42

தொடுக்கும் சிரச் சேடன் சூடாமணி கொண்டு,
எடுக்கும் திருத் தீபம் ஏற்றி; அடுக்கிய 43

தூய வயிரத்தால் வாவியாய், சூழ் கிடந்த
பாய மரகதத்தால் பாசடையாய், தூய 44

பரு முத்தால் ஆலியாய், பற்பராகத்தால்
திரு மிக்க செந்தாமரையாய், பெரு வர்க்க 45

நீலத்தால் வண்டின் நிரையாய், உரை இகந்த
கோலத்தால் கோயில் பணி குயிற்றி;—

திருக்காமக் கோட்டம் திகழ்வித்தமை

சூலத்தான் 46

ஆடும் திருப் பெரும் பேர் அம்பலமும்; கோபுர
மாடம் பரந்து ஓங்கு மாளிகையும், கூடி, 47

பொலங் கோட்டு மா மேருப் பூதரமும் போய
வலங் கோள் திகிரியும் மான; தலம் கொள் 48

நீலை ஏழு கோபுரங்கள் நேரே நெருங்க,
மலை ஏழும் என்ன வகுத்து; தலையில் 49

மகரம் கொள் கோபுரங்கள் மாக விமானச்-
சிகரங்கள் ஆகித் திகழ; நிகர் இல் 50

எரி பொன் படர் பாறை என்னலாய் எங்கும்
விரி பொன் திருமுற்றம் மின்ன; சொரி பொன் 51

கடாரப் பனி நீர் கவினிக் கன பொன்
தடாகங்கள் ஆகித் ததும்ப; விடாது நின்று, 52

அல் பகல் ஆக, அனந்த சத கோடி
கற்பக சாதி கதிர் கதுவ; பொற் பூண் 53

வர மகளிர் தம் தம் பணி முறைக்கு வந்த
சுர மகளிர் ஆகித் துறுமு; ஒரு தான் 54

பிறக்கும் இமயப் பெருங் கடவுட் குன்றம்
மறக்கும்படி செல்வம் மல்க; சிறக்கும் 55

இருக்கு ஆதி எம் மறையும் எவ் உலகும் ஈன்ருள்
திருக்காமக் கோட்டம் திகழ்வித்து;—

தேர், திருவீதி முதலியன அமைத்தல்

அருக்கர் 56

பூணயாம் மணியாலும் பொன்னலும் மின்ன
மணயால் ஓர் ஓர் தேர் வகுத்து; முனவன் 57

திரு வீதி ஈர்-இரண்டும் தேவர்கோன் மூதூர்ப்
பெரு வீதி நாணப் பிறக்கி; வரு நாளில்— 58

கங்கைகொண்ட சோழபுரத்தில் குலோத்துங்கன் நீராடி,
வழிபாடு செய்து, கோலங்கொள்ளுதல்

பொங்கு ஆர்கலி சூழ் புவனம் பதினலும்
கங்காபுரி புகுந்து கண்டு உவப்ப, தங்கள் 59

புவனி பெற வந்த பூபாலர்க்கு எல்லாம்
பவனி எழுச்சி பணித்து, கவினும் 60

மட மயில் ஒக்க மகுடம் கவித்தாள்
உடன் உறை பள்ளி உணர்ந்து, தட முகில் 61

அஞ்சன சைலத்து அபிடேகம் செய்வதென
மஞ்சனம் ஆடி, வழி முதல் செஞ் சடை 62

வானவன் பொன்-தாள் வணங்கி, மறையவர்க்குத்
தானம் அனைத்தும் தகை பெறுத்தி, வானில் 63

கிளைக்கும் சுடர் இந்த்ரநீலக்கிரியை
வளைக்கும் இள நிலா மானத் திளைக்கும் 64

உருவுடை ஆடை தவிர்த்து, ஒரு வெள்ளைத்
திருவுடை ஆடை திகழ்த்தி, ஒரு புடைப் 65

பச்சை உடைவாள் விசித்தது, ஒரு பசும் பொன்
கச்சை நவரத்னக் கட்டு எறிப்ப, வச்ர 66

வெருவு தர எல்லா இரவிகளும் வீழத்
திரு உதரபந்தனம் சேர்த்தி, திரு மார்பில் 67

கார்க் கடல்மீதே கதிர் முத்தத் தாமங்கள்
பாற்கடல் போர்த்தது எனப் பரப்பி,—பாற்கடல் 68

வந்த வனச மகளேபோல் மற்றது
தந்த கடவுள் மணி தயங்க; பந்தச் 69

சுர கனகத் தோள் வலையச் சூட்டுக் கவித்த
உரக பணமணி ஒப்ப; விரவி 70

மகரக் குழை தோள்மேல் வந்து அசைவ மேருச்
சிகரச் சுடர்போல் திகழ; நிகர் இல் 71

முடியின் மணி வெயிலும் முத்தக் குடையில்
வடியும் நிலவும் மலைய;—படி இல் 72

வயங்கு கடகம் மகுடாதி மின்ன,
தயங்கு பெரும் போதி சாத்தி;—முயங்கிய 73

செவ்வி நுதலில் திருநீற்றுப் புண்டரம்
வவ்வி, மகளிர் மனம் கவற்ற; நொவ்விய 74

நாவியும் மான்மதச் சாந்தும் நறை அகில்
ஆவியும் ஆகண்டமும் அளப்ப; தீவிய 75

தோள் மாலை வாசக் கழுநீர் சுழல் சோதிக்
கோள் மாலை கூசக் குளிர் கொடுப்ப,—

யானைமேல் சோழன் பவனிவருதல்

நாள் மாலை 76

வேந்தர் தொழுது இறைஞ்ச, வேதியர் ஏத்தெடுப்ப,
போந்து புறம் நின்ற போர்க் களிற்றை; வேந்தரில் 77

மாக் காதல் யாதவனும் மாறு அழிந்த மீனவனும்
வீக்காமல் எங்குள்ள மெய்ம் முகிற்கும், கோக் கடவுட்கு 78

எட்டாத வச்சிரமும் எல்லா உரும்ஏறும்
வெட்டாமல் எங்குள்ள வெற்பினுக்கும், முட்டா 79

முது வாய் வடவையும், முந்நான்கு கோளும்,
கதுவாமல் எல்லாக் கடற்கும், பொதுவாய் 80

அபயம் கொடுக்கும் அயிராபதத்தை;
உபய வயக் கோட்டு உருமை; விபவ 81

நிருத்தம் தரும் ஓர் நிதிப் பொருப்பைக் கண்ணுற்று,
எருத்தம் திருக் கவின ஏறி,—திருத் தக்க 82

பள்ளித் திருத் தொங்கல் சோலை பகல் விலக்க,
வெள்ளிக் கவிகை மிசை ஓங்க, ஒள்ளிய 83

ஒற்றை வலம்புரி ஊத, அதன் பின்பு
மற்றை அலகில் வளை கலிப்ப, கற்றைக் 84

கவரி இரட்ட, கடவுள் முரசு ஆர்த்து
உவரி உவா ஆடி ஒப்ப, அவிர் வாளும் 85

சங்கும் திகிரியும் சார்ங்கமும் தண்டமும்
எங்கும் சுடர் விட்டு இருள் கீள்ய, கொங்கத்து 86

விற் கொடியும் மீனக் கொடியும் கொடுவரிப்
பொற் கொடி ஒன்றின் புடை போத, தெற்கின் 87

மலையானிலம் வரவே, வார் பூங் கருப்புச்
சிலையான் வரவு தெரிய,—

மன்னரும் மண்டலீகரும் சூழவருதல்
தொலையாது, 88

வீசும் திவலை விசும்பு கூர் மங்குலால்
வாசவன் வந்த வரவு அறிய, 'கூசாதே 89

யாவர் ஒழிவார், இவன் வரவே? மற்று உள்ள
தேவர் வருவர்!' எனத் தெளிய, யாவர்க்கும் 90

பின்னர் வழங்கும் முழங்கு பெருங் களிற்றுத்
தென்னர் முதலானோர் சேவிப்ப, முன்னர்ப் 91

பரவி உலகில் பல மண்டலீகர்
புரவிமிசை கொண்டு போத,—

யானை, குதிரை, முதலிய படைகள் உடன்வர, மக்களும்
ஆரவாரத்துடன் செல்லுதல்

அருவிபோல் 92

விட்டு மதம் பொழியும் வேழம், திசை வேழம்
எட்டும் ஒழிய, புகுந்து ஈண்ட,—கட்டி 93

இரவிக்கு நிற்பன ஏழும் ஒழியப்
புரவிக் குலம் முழுதும் போத,—விரவி 94

உடைய நிதிக் கடவுள் ஊர்தி ஒழிய
அடைய நர வெள்ளம் ஆர்ப்ப, இடையே 95

எழுந்த துகள் உருவ ஏறியும், சுண்ணம்
விழுந்த துகள் உருவ வீழ்ந்தும், தொழும் தகைய 96

விண்ணுலகு மண்ணுலகு ஆகி விளங்க, இம்
மண்ணுலகு பொன்னுலகாய் மாறுட,—

மாகதர், மங்கலப் பாடகர் முதலாயினரின் வாழ்த்து

எண் அரிய 97

மாகதரும், மங்கலப் பாடகரும், விஞ்சையர்
பூகதர் ஆயினர்போல் பரவ; நாகர்- 98

கொழுந்து, எழு கற்பக சாதி குவித்துத்
தொழும்தொறும் மன்னர் சொரிய; எழுந்துள 99

கைம் மழை என்னக் கனகப் பெயல் தூர்த்து
மைம் மழை மாட மறுகு அணைந்தான்.

மறுகில் மன்னனைக் காணச் சூழ்ந்த கூட்டங்கள்

தம்முடைய 100

சாலைதொறும் திரள்வார்; சாளரங்கள் கைக்கொள்வார்;
மேலை நிலாமுற்றம்மேல் தொகுவார்; மாலை தாழ் 101

தெற்றி அடைய மிடைவார், சிலர்; பலர்
நெற்றி சுருங்க நெருங்குவார்; பொற்றெரியார் 102

மாளிகையில் ஏறுவார்; மண்டபத்தில் மண்டுவார்;
சூளிகை மாடம்தொறும் துறுவார்; நீளும் 103

இரண்டு மருங்கினும் இப்படி மொய்ப்பத்
திரண்டு, பலர் எதிரே சென்று, புரண்ட 104

கரும் புருவ வல் வில்லும் கண் மலர் அம்பும்
பெரும் புவன எல்லீல பிடிப்ப,—சுரும்பு 105

நிரைக்கு நிரை முரல, நீலக் குழாங்கள்
இரைப்பின் மொகுமொகு என்ன, விரைச் சுருள் 106

மேகாளகங்கள் மிஞிறு வாய்வைத்து ஊதக்
காகாளம் என்னும்படி கலிப்ப, போகத் 107

தகரம் கமழ் கதுப்பின் தாழ் குழை தோள் தாழ்
மகரம் பிறழ் கொடியின் வாய்ப்ப, இகல் அனங்கன் 108

சேஞ சமுகம் தெரிப்ப, அதன் எதிர்
சேஞபராகம் எனத் திகழ, பூ நாறும் 109

சுண்ணம் எதிர் தூய், உடனே தொடியும் தூஉய்,
வண்ணம் இழப்பார் மனம் இழப்பார்;—

வண்ணமும் மனமும் இழந்த மாதரார் கூற்று

'மண்ணுலகில் 110

இன்னல் பகைவன் இவன்காண்! அகளங்கன்
மன்னர்க்கு மன்னன் மகன்!' என்பார்; 'முன்னர், 111

முது குல மன்னர் முடி வணங்க வந்த
விது குல நாயகி சேய்!' என்பார்; குதுகலத்தால், 112

'கண் மருஞ் செவ்விக் கடவுள் திசாதேவர்
எண்மரும் காணும் இவன்!' என்பார்; 'மண்ணவர்க்கும், 113

தேவர்க்கும், நாகர்க்கும், தெய்வ முனிவர்க்கும்,
யாவர்க்கும், காவல் இவன்!' என்பார்; 'தீவிய, 114

மாதவியும் செங்கழுநீரும் வலம்புரியும்
தாதகியும் கொள்ளத் தரின்!' என்பார்; 'மாதை 115

ஒறுக்கும் மிதிலை ஒரு வில்லைத் தொல்லை
இறுக்கும் அவன் இவன்!' என்பார்; 'மறுக்காமல் 116

சென்று, கனை கடல் தூர்த்து, திருக் குலத்து
நின்ற பழி துடைப்பாய், நீ!' என்பார்; 'இன்று அளவும் 117

துஞ்சும் துயில் இழந்தது; அண்டர் குழல்-துளையில்
நஞ்சும் குமிழி எழும் நாள்' என்பார்; 'பஞ்சவனே! 118

வாடையினும் தண்ணென்னும் மந்தாநிலம் எமக்குக்
கோடையினும் தீது, கொடிது!' என்பார்; கூடி, 119

முருகு வார் கூந்தலார் மொய்த்து அலர்ந்த கண்ணுல்,
பருகுவார்போல், வீழ்ந்து பார்ப்பார்; பொரு மதனன் 120

பார்த்தானே? புங்கானுபுங்கம் படப் பகழி
தூர்த்தானே? யாது என்று சொல்லுகேம்! ஆர்த்தான், 121

உளைத்தான், சிலை இக்கு ஒரு கோடி கோடி
வளைத்தான்; அரும்பு உலகில் மாய்த்தான்.

பேதை

இளைத்தார், 122

இணையர் பலர் நிகழ, ஈங்கு ஒருத்தி, முத்தின்
புனையும் சிறு தொடிக் கைப் பூவை, கனை முகில் நேர் 123

ஆடாத தோகை, அலராத புண்டரிகம்,
பாடாத பிள்ளைப் பசுங் கிள்ளை, சூடத் 124

தளிராத சூதம், தழையாத வஞ்சி,
குளிராத திங்கள்-குழவி, அளிகள் 125

இயங்காத தண் கா, இறக்காத தேறல்,
வயங்காத கற்பகவல்லி, தயங்கு இணர்க் 126

கூழைச் சுருள் முடிக்கக் கூடுவதும் கூடாதாம்
ஏழைப் பருவத்து இளம் பேதை, சூழும் 127

நீலத்து. ஆய வெள்ளம் நெருங்க, மருங்கே
மூலத்தாயர் கைத்தாயர் மொய்ப்ப, தலைத் தாமம் 128

தொக்க கவிகைக் குலோத்துங்க சோழனை,
மிக்க பராந்தகனை, மீனவனை, புக்கார், 129

வணங்க வணங்கி, வழுத்த வழுத்தி,
அணங்க அணங்காள், அகலாள், குணம் காவல் 130

மன்னன் புனையும் திரு முத்த மாலையை,
'அன்னம் படிந்து ஆட ஆறு!' என்னும்; பின், அவன் 131

கோவைத் திருப்பள்ளித் தொங்கல் குழாம், 'கிளிக்கும்
பூவைக்கும் நல்ல பொழில்!' என்னும்; பாவை 132

அயிர்க்கும் இரு கோட்டு அயிராபதத்தை,
'மயிற்கு மலை!' என்று மன்னும்; குயிற்கிளவி 133

தேன் வாழும் தாமம் சூழ் தெய்வக் கவிகையை,
'மான் வாழ மாசு இல் மதி!' என்னும்; 'கோனுடைப் 134

பாங்கு வளை ஆழிப் பார்மடந்தைதன்னுடைய
பூங் குவளை மாலை புனைக!' என்னும்; தேம் கமலத்து 135

அற்புதவல்லி அவளை பிறந்துடைய
கற்பகமாலையைக் காதலிக்கும்; பொற்பு ஆர் 136

பொலம் புரி காஞ்சிப் புகழ் மகட்கே தக்க
வலம்புரி மாலைக்கு மாழ்கும்; பொலன் தொடி, 137

போர் ஆரவாரப் பொலன் கொடி பெற்றுடைய
பேர் ஆர மாலைக்குப் பேதுறும்; 'நேரியன் 138

ஏந்து இழை மாதர் எவர்க்கும் பொது ஆய
பூந் துழாய் மாலை புனைக!' என்னும்; வேந்தன் முன் 139

இவ் வகை அல்லது இலங்கு இழையார் மால் கூரும்
அவ் வகை கூராள்.

பெதும்பை

அயல் ஒருத்தி: எவ் உலகும்

முற்ற முடிக்க முடிக் காம வேள் சூட்டும்
கொற்ற முடி அனைய கொண்டையாள்; அற்றை நாள்

சாத்தும் அபிடேகத் தாரைபோல் தாழ்கின்ற
கோத்த பரு முத்தக் கோவையாள்; தேத்து,

விடம்போல் பணிகட்கு, வேழங்கட்கு எல்லாம்
கடம்போல், கொலை ஊறும் கண்ணுள்; 'அடங்கா

வயிர்ப்பான் மறலி மகள் உருக்கொல் ஈது!' என்று
அயிர்ப்பார் அயிர்க்கும் அழகாள்; 'உயிர்ப் பாவை

கொல்லிக்கும் உண்டு; உயிர் உண்மை த்ரிகூடத்துச்
சொல்லிக் கிடக்கும், துணை மணிக்கும்; வல்லி

இதற்கு நடை வாய்த்து, உயிர் வாய்த்தது!' என்ன,
மதர்க்கும் ஒரு திரு மாது; முதல் தன்

பணி வாயில் ஆயம் பரந்து அகல, கிள்ளைக்கு
அணி வாயில் முத்தம் அருளி, 'மணி வாயால்

சொல்லாய், எனக்கு அன்னை! சொல்லாயோ? நீ அன்றே,
வல்லாய்! பிற அறிய வல்லவோ? கல் அரணக்

கோழித் திரு நகரக் கொற்றவற்கு, வெற்றிப் போர்
ஆழித் தடக் கை அபயற்கு—வாழியாய்!—

காக்கும் கடல் ஏழும் ஆடும் கடாரமோ?
ஆக்கும் நதி ஏழும் ஆரமோ? தேக்கிய

பண் ஏழும் கன்னுவதங்கிசமோ? பண்டு அளந்த
மண் ஏழும் வாகு வலயமோ? தண் நறுந்

தூ வல் நறவப் பொழில் ஏழும் தொங்கலோ?
காவல் மலை ஏழும் கந்துகமோ? ஏவலால்

செய்யும் நலனுடைய கோள் ஏழும் தீபமோ?
பெய்யும் முகில் ஏழும் பேர் இயமோ? 'வையகம்

கூறும் அவை இவை' என்று, குறுந்தொடி
வேறு தனி வினவும் வேலைக்கண்—சீறும் 154

ஒரு தன் அடியின் மடிய உபய
மருது பொருத வயவன், விருதன், 155

விலை இல் அமுத மதன விமலை
முலையில் முழுகு முருகன், வலைய 156

கனக சயில எயிலி கணவன்,
அனகன், அதுலன், அமலன், தினகரன், 157

வாசவன், தென்னன், வருணன், அளகேசன்,
கேசவன், பூ சக்ர கேயூரன், வாசிகை 158

ஆழிப் பெருமான், அபயன், அனபாயன்,
சூழிக் கடா யானை தோன்றுதலும்,—தாழாது, 159

சென்றுள், திரு முன்பு; செந் தளிர்க் கை குவித்து
நின்றுள்; இனி வறிதே நிற்குமே? என்றலும், 160

'கோடு கழல் கண்டல், கொண்டற்கு, மாலதி
ஓடு நகாதே? உடையாதே? பீடு உற 161

வந்து தொடும் குன்ற வாடைக்கு இளங் கொன்றை
கொந்து தொடாதே, குழையாதே? செந்தமிழ்த் 162

தென்றல் எதிர் கொண்ட தே மாங் கொழுங் கன்று
மன்றல் கமழாதே; வாழாதே!' என்று போய், 163

சூது அளவு அல்ல துணை முலை; தூய கண்,
காது அளவு அல்ல, கடந்தன போய்; மாதர் 164

உருவத்து அளவு அன்று, ஒளி ஒக்கம் ஆக்கம்;
பருவத்து அளவு அன்று, பாவம்; தெருவத்து, 165

உடைவது உடையாதாம் உள்ளம்; உற ஓர்ந்து,
அடைவது அடையாதாம் அச்சம்; கடை கடந்து, 166

சேயினும் நல்ல பெருமாள் திருத் தடந் தோள்
தோயினும், தோய மனம் துணியும்; ஆயினும், 167

ஏந்து தடந் தோள் இணைப் பணைப்புக் கண்டிலன்;
காந்து தன தடம் கண்டிலன்; பூந் தடந் 168

தேரின் அகலும் திருந்து அல்குல் கண்டிலன்;
காரின் நெகிழ் அளகம் கண்டிலன்; மாரவேள் 169

எய்யும் ஒரு கருப்பு வல் வில் எடுத்தானே?
கொய்யும் மலர் அம்பு கோத்தானே? 'தையல் மால், 170

மந்தாகினிக் கோன் திருப் புருவ வார் சிலையும்
செந்தாமரைக் கண்ணும், செய்தது!' என நொந்தார்; 171

வளைத் தளிர்ச் செங் கை மடுத்து எடுத்து, வாசக்
கிளைத் தளிர்ப் பாயல் கிடத்தி, 'துளைத் தொகை 172

ஆய்க் குழல்' என்ரூல், அதுவும், 'அவன் ஊதும்
வேய்க் குழல்!' என்று விளம்பியும், 'தீக் கோள்; 173

நிகழ் நிலா அன்று; நிருப குல துங்கன்
புகழ் நிலா!' என்று புகழ்ந்தும், 'இகலிய 174

பல் இயம் அன்று; பரராசகேசரி
வல்லியம்' என்று மருட்டியும், 'மெல்லிய 175

கல்லாரம் அன்று; கதிரோன் திரு மருமான்
மெல் ஆரம்' என்று விளம்பியும், 'நல்லார் 176

அருத்தி அறிவார் அவை இவை' என்று
திருத்தி விட, விடாய் தீர்ந்தாள், ஒருத்தி. 177

மங்கை

உருவ வரிக் கண் ஒழுக ஒழுக,
புருவம் உடன் போதப் போத, வெருவி 178

வன முலை விம்மி வளர வளர,
புனை தோள் புடை போதப் போத, வினைவர் 179

அருங் கலை அல்குல் அகல அகல,
மருங்கு போய் உள் வாங்க வாங்க, நெருங்கு 180

பர வர ராச பயங்கரன்மேல் வேட்கை
வர வர ஆற்றுத மங்கை—'பொர வரு 181

தேம் இரைக்கும் காலியின், ஞாயிற்று இளஞ் செவ்வி
தாமரைக்கே சாலும் தரத்ததோ? காமர் 182

அமுத மதியத்து அலர் நிலா முற்றும்
குமுத நறு முகைக்கே கூரோ? நமது கார் 183

கானின் மட மயிற்கே காணியோ? தண் இள
வேனில் குயிற்கே விதித்ததோ? தேன் இமிர் 184

தண் தாமரையாள் தலைவனே யாமும் போய்க்
கண்டால் என்?' என்னும் கடைப்பிடியாள்; பண்டை 185

ஒளியார் அணங்கு ஆதல் தம்மைத் தாம் ஒன்றும்
தெளியாதவாறே தெளிந்தும், களி அன்னம் 186

வாவிக் கரையில் வர, நீர் அரமகளிர்
சேவிக்க நின்று ஆடும் செவ்வியாள்; காவில் 187

புகுதில், வன தெய்வப் பூங்குழை ஆயத்
தொகுதி புடை பரந்து சூழ்வாள்; மிகு தேன் 188

நிரை அரவம் தரு செய் குன்றம் நீங்கா
வரை அரமாதரின் வாய்ப்பாள்; பெரு விலைய 189

முத்தில் விளங்கின், முளரித் தவளப் பூங்
கொத்தின் அணங்கு அனைய கோலத்தாள்; பத்திய 190

பச்சை மரகதம் பூணின், பணை முலை சூழ்
கச்சை நிலமகள்போல் காட்சியாள்; நிச்சம் 191

உரக பண மணி கொண்டு ஒப்பிக்கில், ஒப்பில்
வர கமலை அன்ன வனப்பாள்; நரபதி, 192

மைம் முகில் வண்ணத்து வானவன், மீனவன்,
கைம்முகில்மேல் வரக் கண்டதன் பின், மொய்ம்மலர் 193

நீலமே வேய்ந்து, அடுக்க நீலமே பூண்டு, உடுக்க
நீலமே அன்றி நினையாதாள்; நீலமே 194

முன் உடைய செங் கேழ் எறிக்கும் முறிக் கோலம்
தன்னுடைய மாமை தழீஇக்கொள்ள, பின்னர், 195

நெருங்கு கழுநீரும் நீலோற்பலமும்
ஒருங்கு மலர் தடம் ஒத்தும், மருங்கே 196

இறங்கிய கற்பக வல்லியும் ஏறி
உறங்கிய தும்பியும் ஒத்தும், பிறங்க 197

வயங்கு தளிர் ஈனும் மாங் கொம்பர் பூக் கொண்டு
உயங்கு கருவிளை ஒத்தும், தயங்குவாள்,— 198

'கோலத் தார் மௌலிக் குலோத்துங்க சோழற்கு,
ஞாலத்தார் எல்லார்க்கும் நாயகற்கு, நீலத்தின் 199

காசும் கலாபமும் மேகலையும் காஞ்சியும்
தூசும் துகிலும் தொடியும், நான் கூசேன், 200

வெளியே தருவேன்; விரை ஆரத் தொங்கல்
கிளியே! தருமேல், நீ கேளாய்! அளியே! நீ 201

தாது கடி கமழ் தாதகித் தாமத்தின்
போது கொழுதப் புறப்படாய்! ஓதிமமே! 202

எங்கள் பெருமாளை இங்கே தருவான், நீ
உங்கள் பெருமானுழைச் செல்லாய்! பைங் கழற்கால் 203

சேயை நீ நீந்து ஏகின், நம்முடைய சேக்கையான்,
சாயல் மயிலே! தளைப்படாய்! பாயும் 204

கடமானே போல்வார்க்கு நீ நின்னைக் காட்டின்,
மட மானே! தானே வரும் காண், கடிது' என்று, 205

கொள்ளை கொள் காமன் கொடும் பகைக்குக் கூசி, தன்
பிள்ளைகளோடு இருந்து பேசுவாள்.—உள்ள 206

அலகு இல் குல நீல ரத்னபரணம்
விலகி வெயிலை விலக்க, உலகில் 207

பெரிய பெருமாள் பெரும் பவனி வீதி
இரிய, எதிர் ஏற்று இழந்தாள், வரி வளை. 208

ஆயத்தார் என்னின், அளியத்தார் எல்லாரும்;
நேயத்தார் அல்லரே நிற்பரே, தேயத்தார் 209

மன்னனே அஞ்சாதே, வாரணத்தை அஞ்சாதே,
மின் அனையாளையும் மீது ஊரா, முன்னர்க் 210

கடம் ஆக்கும் தெய்வக் களிறு விரும்பும்
இடம் ஆதும் யாம் என்பார் போல, படம் ஆய் 211

இரைப்பச் சுரும்போடு இருள் அளக பாரம்
நிரைத்து, வனம் ஆகி நிற்பார்; விரைப் பூண் 212

முலையாய் வளரும் முரண் குவடு கொண்டு
மலையாய் நெருங்க வருவார்; தொலையாத 213

பாய பரு முத்தின் மாலை பல தூக்கி,
தூய அருவியாய்த் தோன்றுவார்; சாயல் 214

கொடியாய் அடி சுற்றிக் கொள்வார்; புரக்கும்
பிடியாய் நறுந் துகள் பெய்வார்; 'விடுதுமோ? 215

யாழாய் மிடற்றுள், வணக்குதும் யாம்!' என்பார்;
தோழாய் வலைத்து எங்கும் சூழ்போவார். ஆழிக் கைத் 216

தியாகனே, மானதனே, திக்கு ஆனை எட்டுக்கும்
பாகனையே பின் சென்று பற்றுவார்; தோகையர், 217

'நல்-துகில் கொண்ட நறுந் துழாய் மார்பா! நின்
பொன்-துகில் தந்தருளிப் போது!' என்பார்; 'மற்று இவள்- 218

தன் சங்கம் கொண்ட தடந் தாமரைக் கண்ணு!
நின் சங்கம் தந்தருளல் நேர்!' என்பார்; 'மின் கொள்ளும் 219

இன் துயிற்கு எல்லாம் எறி பாற்கடல் கொள்ளும்
நின் துயில் தந்தருள், நீ!' என்பார்.—என்று என்று, 220

மானும் மயிலும் அனையார் வலைத்து உளைப்ப,
தானும் களிறும் தடையுண்ட கோனும், 221

தடுத்த கொடிக்குச் சத மடங்கு வேட்கை
அடுத்த திரு நோக்கு அருளா, கொடுத்த 222

திரு நகை மூரல் திகழ்ந்தான்; அணங்கும்
ஒரு நகை கூர்ந்து ஒருவாறு உய்ந்தாள்; பெரு நகை 223

எய்தி, அனங்கன் எழப் போனான்; மாதரும்,
உய்து சிறந்தாளுழைச் சென்றார்.—நொய்தின் 224

தொடுக்கும் புறஞ்சொல் தொடாமே, முலைமீது
அடுக்கும் பசலை அடாமே, உடுக்கும் 225

துகிலும் சரியாமே, சுற்றத்தார் எல்லாம்
புகிலும் புகாமே, பொராமே, அகில் நாறும் 226

பள்ளியில் செல்லாள், பருவ முருகன்-தோய்
வள்ளியின் சால வயங்கினாள், ஒள்ளிழை. 227

மடந்தை

பின்னர் ஒருத்தி: பெருமைக்கு அரமகளிர்
முன்னர் உரைக்கும் முதன்மையாள்; சென்னியில் 228

வண்டல் இடு நாவி வார் குழற்கு மாறு உடைந்து
கொண்டல் சொரி முத்தின் கொண்டையும், பண்டு வந்து 229

ஏற்றுப் பணை பணைக்கும் மென் தோள் இரண்டுக்கும்
தோற்றுச் சொரி முத்தின் சூழ் தொடியும், ஆற்றல் 230

கலம் புரி செல்வக் கழுத்திற்குத் தோற்ற
வலம்புரி முத்தின் வடமும், பொலம் பூண் 231

எதிர்க்கும் முலைக்கு இரிந்த திக்கயக் கோடு இட்ட
கதிர்க்கும் நகை முத்தின் கச்சும், அதிர்க்கும் 232

அடல் விடும் அல்குற் பரவைக்கு உடைந்து
கடல் விடும் முத்தின் கலையும், உடலி மேல் 233

ஏந்தும் இனைய இள நிலா விட்டு எறிப்பப்
போந்து, மறுகு புகுந்து, ஒழிந்தாள்.—வேந்தனும், 234

சட்கோடி மாணிக்கம் ஒன்றும் சமந்தகமும்
உள் கோடு கேயூரத்து ஊடு எறிப்ப, கொட்கும் 235

கடல் சேப்ப வந்த கவுத்துவம் ஒன்றும்
அடல் சேக்கும் மார்பிற்கு அமைய, உடலி 236

அனந்த பணு மவுலி ஆயிரமும் ஒற்றை
நனந்தலை மௌலிக்கு நாண, இனம் கொள் 237

முறுகு கதிரின் முகம் திரிய ஏற்று
மறுகு திரு மலர வந்தான்.—குறுகும் 238

நடை ஆய வெள்ளமும் நாள் நிரம்பு திங்கட்
குடையாய வெள்ளமும் கூடி, அடைய, 239

'மதி உதயம்!' என்று வணங்க, 'வனச
பதி உதயம்!' என்று பணிய, துதியில் 240

ஒருவரும் ஒவ்வா உருவம் மீக்கூறும்
இருவரும் எய்திய எல்லை,—தெருவில் 241

நெருங்க மகளிர் நிறம் திறக்க எய்து
மருங்கு வருகின்ற மாரன், திருந்திய 242

பாய பகட்டு அல்குல் பாரா, அதன் பரப்பில்
போய மருங்குல் புறம் நோக்கா, சாயா 243

முலையின் கதிர்ப்பும் முருகு கெழு தோள்
நிலையின் பணைப்பும் நினையா, கொலையால் 244

உடைக்கும் உலகு அடைய ஊடாடு கண்ணின்
கடைக்கு முடிவு இன்மை காணு, கிடைக்கும் 245

பருவக் கொடி வதன பங்கேருகத்தின்
புருவக் கொடி முடியப் போகா, உருவக் 246

களிக்கும் புடவி சதகோடி கற்பம்
அளிக்கும் பெருமானே அஞ்சா, குளிர்க்கும் 247

கடுங் கால் கொடுந் தேரை முட்டக் கடாவி,
கொடுங் கால் சிலையைக் குனித்து, நடுங்கா, 248

'முகுந்தன் இவன்!' என்று, 'முன்பு எய்த ஏவில்
புகுந்தது இது' என்று போனான்.—திகந்தம் 249

முழுது ஆள் அபயன் முகிழ் நகையும் தோளும்
தொழுதாள்; ஒரு தானே தோற்றாள்; அழுதாள்; 250

திரிந்தாள், கலை நிலையும்; செம் பொன் துகிலும்
சரிந்தாள்; துணைவியர்மேல் சாய்ந்தாள்; பரிந்தார், 251

'முடைக் கை எதிர்க் குரவை கோத்தாய்! முரல் யாழ்
நடைக்கை தொடுக்கை நகையோ? விடைப் பேர் 252

இனம் தழுவிப் பின்னையைக் கொள்வாய்! இவளோத்
தனம் தழுவிக் கொள்கை தவறோ? அனந்தம் 253

கருந் துகில் அக் கோவியரைக் கொள்வாய்! கமலை
தரும் துகில் நோக்கத் தகாதோ? விருந்து 254

துளவ முகிற்கு இது வந்தது, தூய
வளவர் திருக் குலத்து வந்தோ? அளவு இறந்த 255

வன்கண் இவள் அளவும் கண்டேம்; மடவரல்
புன்கண் அடியேம் பொறேம்' என்று, மின் கண் 256

இவை இவை சொல்லிப் போய், இன் அமளி ஏற்றி,
கவிரிதழ் பின்னும் கலங்க, துவரின் 257

வியக்கும் துகிர் இயைய மேம்பட்டு உலகை
மயக்கும் திரு வாய் மலர்க்கும், நயக்கும் 258

பொருப்பு உருவத் தோளின் புதுமைக்கும், நேரே
திருப் புருவம் செய்த செயற்கும், பரப்பு அடையச் 259

செங் கேழ் எறித்து மறிக்கும் திரு நயன
பங்கேருகம் சூழ் படு கொலைக்கும், அங்கே 260

தரிக்குமே தென்றலும்? சந்த்ரோதயமும்
பரிக்குமே? கண்கள் படுமே? புரிக் குழலார் 261

பால் இருத்தி மம்மர் படப்படப் பையப் போய்
மால் இருத்தி, உள்ளம் மயங்கினாள்.

அரிவை

மேல் ஒருத்தி 262

தாளே அரவிந்தச் சாதி தலே வணங்க,
தோளே உரகர் தொழ, இருப்பாள்—'நாளே 263

வளவர் பெருமான் வரும், பவனி!' என்று
கிளவி விறலியர்வாய்க் கேட்டாள்; 'அளவுடைத்து 264

ஓர் இரா அன்று அம்ம! இவ் இரா ஓதிமத்தோன்
பேர் இரா!' என்று பிணங்கினுள்; 'பேர் இரா 265

என்று விடியுங்கொல்!' என்ருள்; 'விடிவு அளவும்
நின்று சுடும்கொல், நிலவு!' என்ருள்; நின்ருர் 266

அடுத்து அடுத்து ஏந்திய திவ்யாபரணம்
எடுத்து எடுத்து ஒப்பித்து எழுந்து, சுடர்க் கதிரோன் 267

மாலேப் பகைவியைப் போக்கி, வருவித்த
காலேத் துணேவியைக் கண்டு எழுந்தாள்; காலேயோன் 268

சேமித்த பூங் கோயில் எல்லாம் திரு என்று
காமித்து இதழின் கடை திறப்ப, நேமி 269

மணக்கத் துணே அன்றில் வாய் அலகு வாங்கித்
தணக்கக் கடி காவில் சார்ந்தாள்; கணக் கதிர் 270

வந்து பொருவது ஒரு மாணிக்கச் செய்குன்றில்,
இந்து சிலாதலத்தில் ஏறினுள்; குந்திக் 271

கடப்பன கன்னி மான் நோக்கியும், அன்னம்
நடப்பன பார்த்து நயந்தும், தொடக்கிக் 272

களிக்கும் மயில் குலம் கூத்தாடக் கண்டும்,
கிளிக் குலம் பாட்டு எடுப்பக் கேட்டும், பளிக்கு உருவப் 273

பாவை மணக் கோலம் பார்த்தும், பல நகை
பூவை பகரப் புறம் சாய்த்தும், கோவை 274

அளிக் களியாட்டம் அயர்ந்தும், கபோத
விளிக்கு அளி கூர்ந்து வியந்தும், களிக்கப் 275

பழிச்சி வணங்கிப் பெருமாள் பவனி
எழுச்சி முரசு ஓர்ந்திருந்தாள்; கழற் செழியர் 276

தென் சங்கம் கொண்டான் திருச் சங்கம் செய்குன்றில்
தன் சங்கம் ஆகி எதிர் தழங்க, மின் சங்கம் 277

போல விழுந்தும் எழுந்தும் புடை ஆயம்
கோல மறுகு குறுகுவாள்; ஞாலம் 278

எடுக்கும் பணி மன்னன், 'மின்' என்று இறைஞ்சி,
கொடுக்கும் சுடிகைக் குதம்பை, கடுக்கும் 279

மயில் வேண்டும் சாயல் வதனும்புயத்து
வெயில் வேண்ட வேண்டி விளைப்ப; பயில் கதிர் 280

வெல்லாது, தோள் சுடிகை மேகாளக இருள்மேல்
எல்லாப் பருதியும்போல் எறிப்ப; கொல் குயத்து 281

வீழ் சோதி சூழ் கச்சு மேருகிரிச் சிகரம்
சூழ் சோதிச்சக்ரம் தொலைவிப்ப; கேழ் ஒளிய 282

பைம் பொன் கடிதடம் சூழ் மேகலை பார் சூழ்ந்த
செம் பொன் திகிரி எனத் திகழ; அம் பொன் 283

புறவும் சகோரமும் பூவையும் மானும்
பிறவும் இனம் என்று பெட்ப; உறவாய் 284

அடர்ந்த பொலன் கேழ் அடிச் சிலம்புக்கு, அன்னம்
தொடர்ந்து, மறுமாற்றம் சொல்ல; நடந்து போய் 285

மானவற்கு, புக்க துறை வல்லவற்கு, வில்லவற்கு,
மீனவற்கு, சென்று வெளிப்பட்டாள். தானே 286

அலரும் முகமும் குவி கையும் ஆகி,
மலரும் முகுளமும் மானப் பலர் காணத் 287

தேனும் அமுதும் கலந்தனைய தீம் கிளவி
மானும் அடைய மனம் கொடுத்தாள்.—கோனும், 288

தடாதே தடுத்தாளைத் தன் கடைக்கண் சாத்தி,
விடாதே களிறு அகல விட்டான்.—படா முலைமேல் 289

ஒத்து இலங்கு வேர் வந்து உறைப்ப, நறைக் கழுத்து
நித்திலம் கால் சங்கநிதி நிகர்த்தாள்; எத் திசையும் 290

சோர்கின்ற சூழ் தொடிக் கைச் செம் பொன் தொடி வலயம்
நேர்கின்ற பற்பநிதி நிகர்த்தாள்; தேரின் 291

அரிவை துகில் நெகிழ, அல்குல் அரவின்
உரிவை விடும் படம் ஒத்தாள்; சொரி தளிர் 292

மாங் கொம்பர் என்ன வருவாள், சுர மரப்
பூங் கொம்பர் என்னப் புறங்கொடுத்தாள்; பாங்கியரும், 293

'ஒற்றை உடை வாள் ஒரு புடையாள் கொற்றவையேல்
மற்றை அருகு இவளை வைத்திலனே! பெற்றுடைய 294

வாரத் தரணியாள் வாழ் தோள் எதிர் மற்றை
ஆரத் திருத் தோள் அளித்திலனே! நேர் ஒத்த 295

பூந் தாமரையாள் எதிரே இப் பொற்றொடிக்கும்
ஏந்து ஆர மார்பம் இசைந்திலனே, வேந்தர்கோன்! 296

அன்னங்காள்! நீர் சென்று அரற்றீர்; கபோதங்காள்!
இன்னம் அபயம் புக்கு எய்திடீர்; நன்னுதற் 297

பாவைகாள்! கொல் யானைப் பா அடிக் கீழ்ப் பணியீர்;
பூவைகாள்! செங்கோன்மை போற்றிசெய்யீர்; தாவிப் போய், 298

பேதை மட மான் பிணைகாள்! வளைத்து உளையீர்;
கோதை மதுகரங்காள்! கூப்பிடீர்; யாது எல்லை 299

என்னை இதற்கு' என்று இரங்கி, இலங்கிழை
தன் ஆர்வம் மாற்று எதிர் சாற்றினாள்.

தெரிவை

பின்னர், 300

பொரு இல் ஒருத்தி புறங்காக்கும் மாதர்
இரு வில் இடை நின்று இறைஞ்சி, 'திரு உலாப் 301

போதும் பெருமாள் புகுதும் அளவும், இங்கு
யாதும் பயிலாது இருத்துமோ?' 'சூது ஆடேம்!' 302

'பந்து ஆடுதும், நாம்; பசும் பொன் குழை சென்று
வந்து ஆடு கண்ணுய்! வருக!' என்று சந்து ஆடும் 303

கொம்மை வரு முலையும் தோளும் குறியாதே,
அம் மென் மருங்குல் பார்த்து அஞ்சாதே, தம்முடனே 304

கொண்டார் அருகு இருந்த பாணரும் கோடியரும்
கண்டார்; எவரும் கடுகினர்; மண்டி 305

எடுத்தார்; எடுத்தன யாவும் எவரும்
கொடுத்தார்; ஒருதானே கொண்டாள்; 'அடுத்து அடுத்து 306

முன்னம் எறி பந்தின் மும் மடங்கு, நான் மடங்கு
இன்னம் எறிய வருக!' என்ருள். அன்னம் 307

அடியும் இரு கையும் அம்புயம் என்று
படியும் ஒழுங்கின் பயில, முடியும் 308

தொடை இடை போய சுழல் கூந்தல் பந்தர்க்கு
இடை இடை நின்ற கால் ஏய்ப்ப, அடைய 309

விழுந்தன பார் கடவா ஆறுபோல் மேல் போய்
எழுந்தன கை கடவா என்ன, கொழுந் தளிரால் 310

ஏற்றுதி விண் கொளா அம்மனே; எம் அனே!
ஆற்றுதி, ஈது இங்கு அரிது' என்னப் போற்ற, 'அருங் 311

கையோ, பதயுகமோ, கண்ணே, கடுகினவை
ஐயோ அறிதல் அரிது!' என்ன, 'பொய்யோ 312

திலக நுதலின் திருவே!' என்று ஓதி,
'உலகு வியப்ப!' என்று ஓத, அலகு இறந்த 313

பந்தாட்டு அயர்ந்து, பணே முலேயார் பாராட்ட
வந்து ஆட்டும் நீராட்டு மண்டபத்து, விந்தை 314

பெருமான், அனபாயன், பேர் இயம் மூன்றும்
தரும் ஆரவாரம் தழங்க; ஒரு மாதர் 315

ஏந்து துகில் ஒன்று உடுத்தாளோ, இல்லையோ?
போந்து, மறுகு புகுந்து ஒழிந்தாள்.—மாந் தளிரும் 316

தாதும் தமனிய மாலையும் தண் கழுநீர்ப்
போதும் பிறவும் புறம் புதையா, ஓதிக்குச் 317

சென்னி யமுனைத் தரங்கமும் தீம் புனல்
பொன்னி அறலும் புறங்கொடுப்ப, பின்னர், 318

ஒழுங்கு ஆய சேயரிக் கண்ணூடு ஒட்டும் மையால்
மழுங்காது கை போய் மதர்ப்ப, செழுங் கழுத்து 319

ஒன்று புனைந்தது ஒரு சங்கம் மாணிக்கம்
இன்று பயந்தது என விளங்க, நின்று இலங்கும் 320

உச்சக் கலன் அணியாத் தோள் இணைக்கு ஓர் இரண்டு
பச்சைப் பசுங் காம்பு பாடு அழிய, நிச்சம் 321

அசும்பு பொலன் கச்சின் அற்றத்தே, கொங்கை
விசும்பு குடிவாங்க வீங்க, பசுஞ் சுடர்க் 322

கோல வயிறு உதரபந்தனக் கோள் நீங்கி,
ஆலின் வளர் தளிரின் ஐது ஆகி, மேலோர் 323

இழியும் ஒரு சாமரேகையும் உந்திச்
சுழியும் வெளி வந்து தோன்ற, கெழிய 324

இசையின் கலாபாரம் யாப்புரு அல்குல்
திசையின் புடை அடையச் செல்ல, மிசையே, 325

பொறை புரி கிம்புரி பூட்டாத் துடை தூசு
உறை இல் மரகதம் ஒப்ப, அறையும் 326

சிலம்பு சுமவாத செந்தாமரை போய்,
உலம்பு குரல் அஞ்சாது ஓட, 'கலம் பல 327

தாங்கி உலகம் தரிப்ப, தரி' என்று
பாங்கியர் எம் மருங்கும் பாராட்ட, பூங் கேழ் 328

உரு இல் ஒளி போய் உலகு அடையக் கோப்பத்
தெருவில் எதிர்கொண்டு சென்றுள்.—பெருமாளும் 329

கொற்றக் குடைக்கீழ் வட மேருக் குன்று அனைய
வெற்றிக் களி யானைமேல் வந்தான்.—பற்றி 330

இருவரும் தம்மில் எதிர் எதிர் நோக்கா
ஒருவர் என வேட்கை ஒத்தார்.—குருசில் 331

மறந்த கடல் கடைய வந்தாள்மேல் அன்பு
சிறந்த திருவுள்ளம் செல்ல; சிறந்தவள் 332

ஆக நகத்து இருந்தாளாகத் திருவுள்ளக்
கோகனகத்தில் கொடு சென்றான்.—நாகு இள 333

நவ்வி மட நோக்கால், ஞாலத்தை ஓர் அடியால்
வவ்வி இரு தோளில் வைத்த மால் செவ்வி 334

முருகு கமழ முகந்து முகந்து
பருகும் மடமகளைப் பாரா, அருகு 335

மடுத்து முயங்கி மயங்கிய தாயர்
எடுத்து மலரணைமேல் இட்டார்.—'அடுத்து ஒருவர் 336

கொய்யாத கற்பகப் பூ மாலை கொண்டைக்கும்,
நெய்யாத பொன்-துகில் நீவிக்கும், செய்யாத 337

தொங்கல் துளைக் கோவை அல்குற்கும், சூழ் கனகத்
துங்கப் பணி வலயம் தோளுக்கும், கொங்கைக்குப் 338

பொன்னிப் புகாரில் பொலன் குழம்பும், வல்லத்தில்
கன்னிப் பனந்தோடு காதிற்கும், சென்னி 339

அளிப்பக் கொணர்ந்தனம் யாம், அன்னமே!' என்று
தெளிப்பச் சிறிதே தெளிந்தாள், கிளிக் கிளவி. 340

பேரிளம் பெண்

மற்றொருத்தி, 'செந்தாமரை மலர்மேல் என்? உடனே
செற்று ஒருத்தி வாழும்' என, செறுவாள், சுற்றவும் 341

தேட்டுத் தசும்பு அசும்பு தெங்கின் இளம் பாளை
மட்டுத் தமனிய வள்ளத்து விட்டு, 342

மறித்து வயிர மடல் ஒன்றின் வாக்கி,
தெறித்து ஞிமிறு ஒப்பி, செவ்வி குறித்துக்கொண்டு, 343

ஏந்தி முகமன் இயம்பி, இருந்து ஒரு
காந்தி மதி வதனி கைக்கொடுப்ப, மாந்தி, 344

குதலை குழறிக் குயிற்கும் கிளிக்கும்
விதலை உலகில் விளைத்து, நுதலை 345

வியரால் அலங்கரியா, வேந்தன் கொடுமை
அயரா, வெளிவிடா, அஞ்சா, பெயரா, 346

அருகு இருந்த பாணனை நோக்க, அவனும்,
குருசில் வரு தமரம் கூற, பரிபுரக் 347

காலும் நிதம்பமும் கையும் திருக் கழுத்தும்
கோலும் மதாணிக் குலம் எல்லாம், மேலோன் 348

குரகதம் ஏழும் முழுகிக் குளிப்ப,
மரகத சோதி வயங்க, புருவ 349

இடைபோய்க் குமிழின் மலர் வந்து இறங்க,
புடைபோய்க் கருவிளை பூப்ப, இடையாக 350

ஏக முருக்கு மலர, இளம் பாளைப்
பூகம் மிடறு வரப் பொதிய, போகப் 351

பெரும் பெருந் தெங்கு இளநீர் தாழ்ந்து பிறங்க,
பரும் பெருங் காம்பு பணைப்ப, விரும்பும் 352

நறுந் துணர் மாந்தளிர் வார்ந்து நளிய,
குறுந் தொடிக் காந்தள் குலைப்ப, செறிந்து 353

சலித்துத் தனி இள வஞ்சி தளர,
கலித்துக் கதலி கவின, ஒலித்தே 354

அளிக்கும் சகோரமும் அன்னமும் மானும்
களிக்கும் மயூர கணமும் விளிக்கும் 355

புறவும் தொடர்ந்து உடனே போத, அவையே
பிறவும் இனம் என்று பெட்ப, சுறவு உயர்த்தோன் 356

காலே புகுந்து கரப்பது ஒரு பசும் பொற்
சோலே என வந்து தோன்றிஞள்.—ஞாலத்தோர் 357

தெய்வப் பெருமாளும், சேவடி முன் குவித்துக்
கைவைத்து நின்றவளேக் கண்ணுற்ருன்;—தையல் 358

வெருவ முன் சூர் தடிந்த வேளே நயக்கும்
பருவமும், மார்பில் பணேப்பும், புருவமும், 359

செந்தாமரைக் கண்ணும், மா மேருவைச் சிறிய
பந்து ஆகக் கொள்ளும் பணேத் தோளும், உந்தியும், 360

உய்ய இரு காதும், மூக்கும், உடுபதியை
நைய எறிக்கும் நகை நிலவும், செய்ய 361

பவளத் துவர் வாயும், பாதாம்புயமும்,
கவளக் களிற்று எளிதின் கண்டு, குவளேக் 362

கரு நெடுங் கண் களிப்ப, உள்ளம் களிப்ப,
பரு நெடுந் தோளும் பணேப்ப, 'ஒரு நின் 363

சிலம்புகள் ஓர் ஏழும் சென்று அடைந்து, நோலேன்;
அலம்பு கடல் ஏழும் ஆடேன்; வலம் புவனம் 364

ஏழும் செலவு அயரேன்; எம் கோவே! நின் குடைக்கீழ்
வாழும் திரு எனக்கு வாய்க்குமே? தாழி 365

முடை தழுவு தோளும் முலேயும் தழுவ,
விடை தழுவு தாமரைக் கை வீரா! கட கரியைக் 366

கை தழுவி, கோரத்தைக் கால் தழுவி, நின் புலியை
மெய் தழுவிக் கொள்ள விடுவாயோ? மொய் திரை சூழ் 367

ஞாலம் மறிக்கவும், நாயக! நின் புகல்வில்
கால உததி கலக்கவும், சால 368

வருந்தா வகை வருந்த, ஆழி பெயரும்
பெருந்தேவியார்க்குப் பெறலாம்; திருந்திய 369

குந்தம் ஒசித்ததுவும், கொற்றத் திருத் தோளால்
வந்த விடை ஏழும் மாய்த்ததுவும், முந்துறக் 370

கோவிய மாதர்க்கே? உள்ளம் குறை கிடந்த
ஆவியேமாதாக அஞ்சுமே; ஓவிய 371

சேரன் சிலையினும் சீரிதே; சென்று ஓசிய
மாரன் சிலையை வணக்காயால்; சேரன்தன் 372

முன்றில் பணை தடிந்தாய்; முட்டாது இரவு ஒறுக்கும்
அன்றில் பணை தடிதல் ஆகாதோ? கன்றி 373

மலைக்கும் செழியர் படைக் கடலை மாய்த்தாய்!
அலைக்கும் கடல் மாய்த்தருளாய்! மலைத்தவர் 374

தங்கள் புகழ் நிலவை மாய்த்தாய்! அரி மரபில்
திங்களின் தண்ணிலவு தீராயால்; பொங்கு ஒலி நீர்த் 375

தெம் முனை யாழ் தடிந்தாய்! எங்கள் செவி கவரும்
எம் முனை யாழ் தடிந்தால் என் செய்யும்? செம்மணியின் 376

செஞ் சோதி சிங்களத்து மாற்றுவாய்! செக்கரின்
வெஞ் சோதி கண்டால் விலக்காயால். வெஞ் சமத்துக் 377

காதி விடை பண்டு காடவன் முன் தடிந்தாய்!
வீதி விடை தடிய வேண்டாவோ? யாதுகொல், 378

வன் பல்லவம் துகைத்த வாள்-தானை இன்று இந்த
மென் பல்லவம் துகையா மேம்பாடு? தன் பூங் 379

கருப்புச் சிலை கொண்டு மோதும்; கழுத்தில்,
சுருப்பு நாண் புக்கு அழுந்தத் தூக்கும்; நெருப்பு உமிழ் 380

அப்புக் கழு ஏற்றும்; ஆறுப் பெருங் கோப
வெப்புப் படுத்து எங்கள் மெய் உருக்கும்; தப்பா 381

உடல் பிளவு ஓட, ஒரு தேர் இட்டு ஊரும்;
அடல் மகர போசனம் ஆக்கும்; விடு தூதால் 382

அக் கால தண்டம் அகற்றி, உலகு அளித்தாய்!
இக் காம தண்டம் எளிது அன்றே! மைக் கோல 383

வண்ணு! வளர்ந்த மகராலயம் மறந்த
கண்ணு! அநங்கன் போர் காவாயேல், மண்ணுலகில் 384

எப்படி ஆவார் இளம்பிடியார்!' என்று என்று,
மைப் படியும் கண்ணுள் வருந்தினுள்.—இப்படியே 385

தையலார், பொன் தோகைச் சாயலார், கை அகலா
மையலார், பேர் அலராய் மன்று ஏற, வையம் 386

பெருகு உடையாம் நீர் ஏழும் பார் ஏழும் பேணும்
ஒரு குடையான் போந்தான் உலா. 387

என்று இனி மீள்வது—அரிதின் இரணியனே
அன்று இரு கூறாய் அடர்த்தருளி, கன்றுடனே
ஆவின் பின் போன அனகன் அனபாயன்
மாவின் பின் போன மனம்?

Printed by S. Viswanathan at the Central Art Press,
'Acton Lodge', 11 McNichol Road, Chetput, Madras 31.